சார்பு நீதிமன்றம், மன்னார்குடி

OS No.135/2016

06.08.2024

**வா.சா.3 M. நிலவழகன் த/பெ. S . மாணிக்கவேலன் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை .**

வழக்கு சொத்தை அளந்து வரைபடம் வரைந்து ஆணையர் அறிக்கை தாக்கல் செய்ய எனக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் . நான் கைப்பட வரைந்து வரைபடம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். இந்த வரைபடத்தில் உள்ள அளவீடுகள் அனைத்தும் சர்வேயர் செய்ததை தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். இந்த அளவீடுகள் எந்த எந்த ஆவணங்களின் அடிப்படையில் அளந்தார்கள் என்பதை சர்வேயரை விசாரித்தால் தான் தெரியும் என்றால் சரிதான். சர்வேயர் வரைபடத்தில் ஆக்கிரமிப்பு பகுதி பற்றி சர்வேயரை கேட்டால் தான் தெரியும் என்றால் சரிதான். வாதி பிரதிவாதிகளின் வீடுகள் பழமையான தெரு என்றால் சரிதான். அது நகர அமைப்பின் கீழ் அமைக்கப்பட்ட லேஅவுட் என்றால் சரிதான். ஆக்கிரமிப்பு பகுதி முன்பகுதியில் தான் உள்ளது. பின் பகுதியில் இல்லை என்றால் சரிதான். சர்வே எண் 392 , 393 மட்டும் அளந்தேனா அல்லது அந்த தெரு முழுவதும் அளந்தேனா என்றால் அந்த தெரு முழுவதும் அளந்தேன். வாதி, பிரதிவாதி வீடு வாசல் கிழக்கு பார்த்து உள்ளது . தெரு தென்வட தெருவாகும் . தெரு தென் வடலாக ½ கி. மீ நீளம் இருக்கும் என்றாலும் நிறைய வீடு இருக்கும் என்றால் சரிதான். நான் எல்லைக்கல் அடிப்படையில் அளந்தேனா அல்லது அந்த அந்த வீட்டு காமொண்ட் சுவர் படி அடிந்தேனா என்றால் அதை சர்வேயரிடம் தான் கேட்கவேண்டும் . எந்த கல்லை அடிப்படையாக வைத்து அளந்தார் என்றால் சரிவேயரைதான் கேட்கவேண்டும். அளவீடுகள் அனைத்தும் முழுமையான அளவீடு இல்லை என்றால் சரியல்ல.

Sd/- திரு. S. முத்துராமன் ,

சார்பு நீதிபதி , மன்னார்குடி.